1710

மாக்மில்லன் தமிழ் வாசக புத்தகம்

# இரண்டாம் வாசக புத்தகம்

மூன்றாவது வகுப்புக்கு

21 MAR 1924

TB
031(3)
N34
86161

தமிழ்

# இரண்டாம் வாசக புஸ்தகம்

(மூன்றுவது வகுப்பிற்கு)

22 MAR 1924

(புதிய பதிப்பு.)

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிட்டெட்.
மதருஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.

1924

விலை 4 அணு

494.81186
1420

TB
031(3)
N24

Printed at
The Guardian Press
Madras.

86161

# உபாத்தியாயருக்குக் குறிப்புகள்.

1. பாடத்தைப் படிக்கத் தொடங்குமுன் பிள்ளைகள் படத்தைக் கவனிக்கும்படி செய்யவேண்டும்.

2. படத்தின் ஒவ்வொரு பாகத்தையும் செவ்வையாய் உற்றுப் பார்த்து விடை யளிக்கும்படியான கேள்விகள் கேட்கவேண்டும்.

3. படத்திற் காட்டிய பொருளைப்பற்றி மாணுக்கர்களோடு சம்பாஷணை செய்வதுபோலக் கலந்துபேசி அவர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கவேண்டும்.

4. பிள்ளைகள் கவனித்தறிந்த விஷயங்களிற் பரீக்ஷை செய்து, அவர்கள் படத்தின் மூலமாயும் தாமாகவும் அறிந்த விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்கவேண்டும்.

5. பிள்ளைகள் பார்த்தும் தாமாகவும் தெரிந்துகொள்ள முடியாத விஷயங்கள் சிலவற்றைப் பாடத்திற்கு அவசியமான அளவுசொல்லவேண்டும்.

6. பிள்ளைகளோடு சம்பாஷணை செய்யும்போது பாடத்திற்கு அதிக சம்பந்தமில்லாத விஷயங்களில் மனம்புகாமற் காக்கவேண்டும்.

7. பாடத்திற் குறித்த விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்கும்போது, அதன் அடியில் எழுதியிருக்கும் கேள்விகளை மாத்திரம் கேட்டுவிட்டுப் பாடத்தை முடிக்கக்கூடாது. அக்கேள்விகளை மாதிரியாகக்கொண்டுவேறுகேள்விகளையும் கேட்கவேண்டும்.

8. எந்த எந்தப் பாடங்களில் சாத்தியமோ அந்த அந்தப் பாடங்களிலெல்லாம் நல்லொழுக்க முறைகளைக் கற்பிக்கவேண்டும்.

9. கடின பதங்கள் எவையேனும் இருக்குமானல் அவைகளுக்கு நேரான சுலபமுள்ள வார்த்தைகளைக் கறுப்புப்பலகையில் எழுதிக் காட்டவேண்டும்.

10. ஒவ்வொரு பாடத்தையும் முறையாகக் கற்பித்து, பிள்ளைகள் கண்டு கேட்ட விஷயங்களோடு சம்பந்தப் படுத்தவேண்டும்.

# பொருள் அடக்கம்.

விஷயம்.



| பாடம். | (வசனம்). | பக்கம். |
|---|---|---|
| 1. | செம்மறி ஆடு | 1 |
| 2. | தைரியமுள்ள ஒரு ஆடு | 4 |
| 3. | எருதுகள் | 7 |
| 4. | எருதுகளின் கதை | 11 |
| 5. | குரங்கு | 13 |
| 6. | குரங்குகளின் புத்தி கூர்மை | 17 |
| 7. | வேப்பமரம் | 19 |
| 8. | காற்று தன்னைப்பற்றிச் சொல்லிய கதை | 22 |
| 9. | நமது சக்கரவர்த்தி | 24 |
| 10. | காய்கறிக்கடை (முதற்பாகம்) | 30 |
| 11. | காய்கறிக்கடை (இரண்டாம் பாகம்) | 34 |
| 12. | எருமை | 38 |
| 13. | தபாற்காரன் | 41 |
| 14. | ஒரு பட்சி தன்னைப்பற்றிச் சொல்லிய கதை | 45 |
| 15. | குடை | 48 |
| 16. | என் பெயரென்ன? | 51 |
| 17. | மகா பாரதம் | 54 |
| 18. | நல்ல வியாபாரம் | 58 |
| 19. | நெற்பயிர் | 60 |
| 20. | கிராமக்கிணறு | 68 |
| 21. | குள்ளவாத்து | 70 |

(செய்யுள்)

| | | |
|---|---|---|
| 1. | ஆத்திசூடி | 73 |
| 2. | கொன்றை வேந்தன் | 76 |
| 3. | வெற்றி வேற்கை | 78 |

# இரண்டாம் வாசக புஸ்தகம்.

## பாடம் 1.



## செம்மறி ஆடு.

1. மேலே இருக்கிற படத்தில் உள்ள மிருகத்தைப் பார். இது ஒரு செம்மறி ஆடு. ஆடுகளில் வெள்ளாடு என்று ஒருவகை உண்டு. ஆண் ஆட்டிற்குக் கிடா என்று பெயர். படத்தில் இருப்பது ஆண் ஆடுதான்.

2. இதன் கொம்புகள் எவ்வளவு சுருண்டு வளைந்திருக்கின்றன பார்? வெள்ளாட்டின் கொம்புகள் இப்படி சுருண்டு இராமல் நேராக வளர்ந்திருக்கும். செம்மறி ஆடுகளில் பெண் ஆட்டிற்குக் கொம்பு இல்லை. செம்மறி ஆட்டின் கண்கள் அதன் தலையின் இரண்டு பக்கங்களிலும் இருக்கின்றன; ஆனல் நமக்கு இருப்பதுபோல் முகத்

தில் முன்பக்கத்தில் இல்லை. செம்மறி ஆட்டின் கண்கள் மிகவும் நுட்பமானவை.

3. ஆட்டின் குளம்புகளை உற்றுப்பார். அவை அழுத்தமாயிருக்கும். பசுக்களின் குளம்புகளைப் போல் செம்மறி ஆட்டின் குளம்புகளும் பிளவு பட்டிருக்கும். அதனால்தான் கற்பாறைகளின் மேல் ஏறுவதும் அங்கிருந்து கீழே குதிப்பதும் அதற்குச் சுலபமாயிருக்கின்றது.

4. செம்மறியாடு வெள்ளாட்டைப்போல் உயரமாண மிருகம் அன்று. செம்மறி ஆடு சிவப்பு நிறமுள்ளது. வெள்ளாடு கறுப்பாக இருக்கும்.

5. மனிதர்கள் ஆடுகளை மந்தை மந்தையாய் வளர்க்கிறார்கள். ஆடுகளை மேய்த்து வருகிறவனுக்கு ஆட்டிடையன் என்று பெயர். ஒரு மந்தையில் அநேகம் ஆடுகள் உண்டு. அவை பசுமையான புல்லைத் தின்னும். பசும்புல்லை மேய்வதற்காகவே இடையர்கள் தங்கள் ஆடுகளை மலைகளுக்கு ஓட்டிக்கொண்டு போவார்கள்.

6. செம்மறி ஆட்டிற்கு உடம்பு முழுவதும் மயிர் அடர்ந்திருக்கும். இம்மயிரே அதற்கு ஒரு சட்டைபோல் இருக்கிறது. இதனால் அதன் தேகம் எப்போதும் கதகதப்பாய் இருக்கும். ஆகையால் குளிர்காலத்தில் ஆட்டிற்கு இம்மயிர் மிகவும் உபயோகமாயிருக்கிறது. கோடைக்காலத்தில் அதற்கு அவ்வளவு அவசியமில்லை. ஆகையினாலேதான் கோடையின் ஆரம்பத்திலேயே அம்மயிர்கள் உதிர ஆரம்பிக்கின்றன. அவ்வாறு உதிர்ந்து வீணாகாதபடி மனிதர்கள் அம்மயிரைக்

கத்தரித்து விடுகிறார்கள். அந்த மயிரினால் கம்பளி முதலானவை நெய்கிறார்கள்.

7. ஜனங்கள் குளிர் காலங்களில் கம்பளிகளைப் போர்த்துக் கொள்வதுண்டு. கம்பளியைப் போர்த்துக் கொண்டால் தேகம் கதகதப்பாக இருக்கும். செம்மறி ஆட்டின் மயிர் வெள்ளாட்டின் மயிரைப்போல் மென்மையாய் இராது.

8. ஆடுபால்கொடுக்கும். பால் கறக்கும்போது பசுவைப்போல் ஆட்டின் கால்களில் கயிறு கட்டுவதில்லை. ஆடு மிகவும் சாதுவான மிருகம். பல மனிதர்கள் ஆட்டின் மாமிசத்தைத் தின்கிறார்கள். அதன் மாமிசத்தைத் தின்பதற்காகவே அநேக மிருகங்களும் அதைக்கொல்லுகின்றன.

9. ஆட்டிடையன் தன் ஆடுகளிடத்தில் மிகவும் பிரியமாயிருப்பான். இராத்திரிவேளைகளில் தன் ஆடுகளைக் கொட்டிலுக்குள் அடைத்துப் பத்திரமாய்ப் பாதுகாப்பான். ஆட்டுக்குட்டிகளை, பெரிய மூங்கில் கூடைகளால் மூடிவைப்பான். பொழுது விடிந்ததும் இந்த ஆடுகளை வகை வகையாகப் பிரிப்பான். அது பார்க்க மிகவும் ஆச்சரியமா யிருக்கும். ஒவ்வொரு இடையனும் அவனவன் மந்தையில் ஏதேனும் ஓர் ஆட்டை அடையாளம் செய்து வைத்திருப்பான். அந்த ஆட்டின் பின்காலைப் பிடித்து மந்தையிலிருந்து இழுத்துக்கொண்டு போவான். அப்போது மந்தையைச்சேர்ந்த மற்ற ஆடுகள் எல்லாம் அதன் பின்னே போகும். இம்மாதிரி ஒன்று போன வழியே எல்லா ஆடுகளும் போகும். முன்னே இருக்கும் ஓர் ஆடு மலையின் உச்சியிலிருந்து கீழே குதித்தால் பின்னே உள்ள ஆடுகள் எல்லாம் அந்த மாதிரியே குதிக்கும்.

பதங்கள்:—மிருகம் - கிடா - நுட்பமானவை- குளம்பு - மந்தை - இடையன் - கம்பளி-கூடை.

காபிபாரம்:—ஆடு தழை தின்னும்.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.


## பாடம் 2.

# தைரியமுள்ள ஒரு ஆடு.

1. கோபாலன் என்னும் ஒரு இடையன் அநேகம் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்தான். அவன் மந்தையில் ஒரு பெரிய ஆட்டுக்கிடா இருந்தது. அது மிகவும் உயரமாகவும் பருமனாக வும் கூரான கொம்புகள் உள்ளதாயும் இருந்தது. அதற்கு உடம்பில் மயிர் அடர்த்தியாகவும் உதட் டின் கீழே தாடி நீண்டும் இருந்தன. அதைப் பார்த்தவுடன் எல்லோரும் பயப்படுவார்கள். ஒரு வருக்கும் அது பயப்படுவதில்லை. அது எப்போ தும் சண்டையில் பிரியமுள்ளது.

2. ஒருநாள்கோபாலன் தன் ஆடுகளைமேய்க்க அதிக தூரத்திலுள்ள ஒரு காட்டுக்கு ஓட்டிக் கொண்டு போனான். பொழுதுபோனதும் அவை களை ஓட்டிக்கொண்டு திரும்பி வரும்போது அந்தக்கிடா காணப்படவில்லை. அது வழி தப்பி ஒரு மலை அடிவாரத்தில் ஓடிவிட்டது. இருட்டி விட்டபடியால் அதற்கப்பால் போக அதற்கு முடியவில்லை. தட்டித் தடவி ஒரு குகைக்குள்ளே

சென்று படுத்துக்கொண்டது. வெளியே இரை தேடப்போயிருந்த ஒரு சிங்கம் அந்தக் குகைக்கு விடியற்காலத்தில் திரும்பி வந்துகொண்டிருந் தது. சிங்கம் மிகவும் பயங்கரமான பிராணி. மிரு கங்களுக்கெல்லாம் அதுதான் அரசன். அதன் அருகில்போவதற்கும்மற்றமிருகங்கள்பயப்படும். மனிதர்களும் பயப்படுவார்கள். ஆகையால் சிங் கத்தைக் கண்டவுடன் அந்த ஆட்டுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. 'இனி நாம் இறப்பது நிச்ச யம்; இதற்குத் தப்புவதில்லை. ஆனாலும் தைரி யத்தைக் கைவிடக்கூடாது' என்று எண்ணிற்று. பிறகு எழுந்து அது தன் தலையை அசைத்துக் கொம்புகளால் தரையைக் கீறிக்கொண்டே, 'ஆ,



'ஆ! நல்ல ஆகாரம், கிட்டே வா; நான் அற்ப ஆடானாலும் என் வாழ்நாளில் பத்துப் புலி களைக் கொன்று தின்றிருக்கிறேன்; இருபத்

தைந்து யானைகளையும் சாப்பிட்டிருக்கிறேன். ஒரு சிங்கத்தைச் சாப்பிடாமல் இந்தத் தாடியை எடுப்பதில்லை என்று எண்ணியிருந்தேன். இன்றைக்கு நல்ல வேளையாய் என் எண்ணம் நிறைவேற நீ வந்து சேர்ந்தாய்' என்று உரக்கச்சொல்லிற்று.

3. அதைக்கேட்ட சிங்கம் நடுநடுங்கி அதைப் பார்க்கவும் தைரியமில்லாமல் வந்த வழியே ஓடிவிட்டது. பொழுது விடிந்ததும் ஆட்டுக்கிடா சரியான வழியைக் கண்டுபிடித்துத் தன் இடம் போய்ச் சேர்ந்தது.


ஆபத்து வேளையில் தைரியத்தைக் கைவிடக் கூடாது.

பதங்கள்:—உயரமாக-பருமனுக-பிரியமுள்ள-மலையடிவாரம்-விடியற்காலம் - அரசன் - பயங்கரமான—பிராணி - இருபத்தைந்து.

காபிபாரம்:—ஆட்டுப்பால் மருந்துக்கு உதவும்.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## பாடம் 3.



# எருதுகள்.

1. மேலே இருக்கிற படத்தில் உள்ள இரண்டு எருதுகளைப் பார். ஒரு மனிதன் அவைகளை ஓட்டிக்கொண்டு போகிறான். எங்கிருந்து அவன் ஓட்டி வருகிறான்? எங்கே ஓட்டிக்கொண்டு போகிறான்? அவன் அவைகளை வயலில்இருந்து ஓட்டிவருகிறான். அவன் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்காகவே அவைகளை ஓட்டிக்கொண்டு போயிருந்தான். அவன் இப்போது அவைகளை வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு போகிறான். எருதுகளையே காளைமாடுகள் என்றுசொல்லுகிறோம்.

2. பசுவைப்பற்றி நீ முதல்வாசக புஸ்தகத்தில் படித்திருக்கிறாய் அல்லவா? எருதும் பார்வைக்கு அநேகமாய்ப் பசுவைப்போலவே இருக்கும். பசுவைப் போலவே எருதின் காலில்

குளம்புகள் இரண்டுபிரிவாக இருக்கிறது. பசுவைப் போல் இதுவும் புல், வைக்கோல், அகத்திக்கீரை முதலியவைகளைத் தின்னும். தவிடு, பிண்ணாக்கு, வேகவைத்த கொள்ளு இவைகளும் எருதுக்குத் தீனியாகும். இதுவும் மாமிசம் தின்னாது.

3. எருதுகள் கஷ்டப்பட்டு வேலை செய்யும் பிராணிகள். அவைகள் ஏர் உழவும், தண்ணீர் இறைக்கவும், வண்டி இழுக்கவும் உபயோகப் படுகின்றன. சில இடங்களில் அவற்றின் மேல் மூட்டைகளை ஏற்றி ஓட்டிக்கொண்டு போவார்கள். டமாரங்களை எருதுகளின் மேல் வைத்துக் கட்டி மேளக்காரன் ஏறி உட்கார்ந்து அவைகளை அடித்துக்கொண்டு போவதை நீ பார்த்ததில்லையா?




4. வண்டி இழுக்கும் எருதுகளின் குளம்புகள் தேயாதபடி லாடம் அடிப்பார்கள். லாடம் என்பது குளம்பிற்குத் தக்கவாறு செய்யப்பட்ட இரும்புத்துண்டு. மேலே காட்டிய படத்தைப் பார்.

இதில் எருதுக்கு லாடம் அடிக்கும் விதத்தைக் காட்டி யிருக்கிறது.

5. இந்த எருதுகளின் கொம்புகளைப் பார். எவ்வளவு கூர்மையாக இருக்கின்றன? எருது களைத் தொந்தரவு செய்தால் அவை கொம்பு களால் முட்டும். காடுகளில் திரியும்போது புலி முதலிய துஷ்ட மிருகங்கள் தூரத்தினுல் அவை களை எருதுகள் தங்கள் கூர்மையான கொம்பு களால் எதிர்க்கும்.

6. முன் பக்கத்தில் இருக்கும் படத்தை நன்ருகப் பார். குடியானவன் ஒரு கையில் கொம்பு வைத்திருப்பது எதற்காகத் தெரியுமா? அதனுல் தான் அவன் எருதுகளை அடித்து ஓட்டுவான். அவன் மற்றொரு கையில் எருதுகளின் தலைக் கயிற்றைப் பிடித்திருக்கிருன். இல்லா விட்டால் அவை நேராகப் போகமாட்டா. வண்டியில் கட்டும் எருதுகளுக்கு மூக்கில் துவாரம் செய்து அதில் மெல்லிய கயிற்றைக் கோத்துத் தலைக் கொம்புகளின் ஓரமாய்க் கட்டுவார்கள். அதற்கு மூக்காங்கயிறு என்று பெயர். அதில் ஒரு பெருத்த கயிற்றைக்கட்டி கையில் பிடித்துக் கொள்வான். அப்போது அவை வண்டிக்காரன் இஷ்டப்படி நடக்கும்.

7. குடியானவர்கள் எருதுகளை மிகவும் அன் பாக வளர்ப்பார்கள். தினந்தோறும் அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டி வைக்கோல் முதலிய தீனி போடுவார்கள். குடிக்க ஜலமும் ஒரு தொட் டியில் அவைகளின் சமீபத்தில் வைப்பதுண்டு. தாகம் உண்டாகும் பொழுது அவை தண்ணீர் குடிக்கும். சாயங்காலங்களில் தவிட்டைத் தண்

ணீர் தெளித்துப் பிசைந்து வைப்பார்கள். பசு வைப்போல் எருதுகளுக்கும் நல்ல தீனிபோட வேண்டும்.

8. எருதுகளில் பலவகை உண்டு. அவற்றுள் சில உயரமாகவும் பருமனாகவும் இருக்கும். அவைகளின் கொம்புகள் சிறியவை. இந்த எருதுகள் பாரமான சுமை வண்டிகளை இழுக்க உபயோகமாகின்றன. மற்றொரு ஜாதி எருது களின் கொம்புகள் பெரியவை. அவைகள் மேலே சொன்ன எருதுகளைப் போல் அதிக உயரமாக இருக்கமாட்டா. அவைகள் வேகமாய் ஓடும். எருதுகளில் சில குள்ளமாகவும் இருப்பதுண்டு.

பதங்கள்:—வயல்கள்—உட்கார்ந்து - தேயாத படி—இருக்கும் — குடியானவன்— துவாரம் — இஷ்டப்படி — அன் பாக — வளர்ப்பார்கள் — குளிப் பாட்டி—பாரமான — தவிடு.

டிராயிங்கு:—எருதின் தலை.

களிமண்வேலை:—எருதின் கொம்பு.

காபிபாரம்:—பசு பால் கொடுக்கும்.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக. லாடம் அடிப்பதைக் காட்டி யிருக்கும் படத்தை விவரித்து எழுதுக.


பாடம் 4.

## எருதுகளின் கதை.

1. தர்மபுரி என்னும் ஊரில் சுப்பன் என்று ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் இரண்டு ஜோடி மாடுகள் இருந்தன. அவைகள் நிறத்தி லும் உருவத்திலும் ஒன்றுக்கொன்று மாறுதல் இல்லாமல் இருந்தன. நீளத்திலும் உயரத்தி லும் அவைகள் சரியாகவே இருந்தன. அவைக ளின் கொம்புகள் நீண்டு கூர்மையாக வளர்ந் திருந்தன.

2. உழவு காலம் போக மற்ற வேளைகளில் சுப்பனுடைய மகன் அவற்றை மேய்த்து வரு வான். அவன் பெயர் முருகன். முருகனுக்கு அந்த எருதுகளினிடம் பிரியமுண்டு. அவன் அவற்றை ஒவ்வொரு நாளும் புல் உள்ள இடங் களில் மேய்த்து வருவான்; தெளிவான நல்ல தண்ணீர் காட்டுவான். உடம்பில் அழுக்கில்லா மல் அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டுவான்; நடுப்பகலில் வெயில் அதிகமாக இருக்கும்போது மரங்களின் நிழலில் நிறுத்துவான்; அவைகளுக் குத் தினவெடுக்கும்போ தெல்லாம் சொறிந்து கொடுப்பான். அவன் அவற்றை ஒருபோதும் அடிப்பதும் இல்லை; அதட்டுவதும் இல்லை. அவைகள் கஷ்டப்படும்படி வேலை வாங்குவதும் இல்லை. இதனால் அந்த எருதுகள் அவனைப் பார்த்ததும் அவனிடம் செல்லும். அவன் குரலைக் கேட்டால் அவன் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு வேகமாக ஓடும். ஊரில் மழை

பெய்யாமற் போனதால் வயல்களெல்லாம் காய்ந்துவிட்டன. ஆடுமாடுகள் மேய்வதற்கு ஊரில் புல் கிடைக்கவில்லை. ஆகையால் முருகன் ஊரிலிருந்து கொஞ்ச தூரத்திலுள்ள ஒரு காட்டில் அவற்றைமேய்த்துக்கொண்டு வந்தான். சிலகாலம் இப்படியே நடந்து வந்தது. ஒருநாள் முருகன் எருதுகளை மேயவிட்டுவிட்டு ஒரு மரத்தடியில் படுத்திருந்தான். திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. முருகன் திடுக்கிட்டு எல்லாப் பக்கங்களிலும் பார்த்தான். அப்போது அவனுக்



குப்பின்னே ஒரு புலி வந்து கொண்டிருந்தது. அதைப்பார்க்கவும் அவனுக்கு உண்டான பயம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. அவனுக்கு யாரையாவது உரக்கக் கூப்பிடவும் முடியவில்லை. வாய் குழறி விட்டது. ஓடவும் கால் எழவில்லை. இருந்தாலும் அவன் அழுது கொண்டு ஓடினான். வெகு தூரத்தில் மேய்ந்து

கொண்டிருந்த எருதுகள் அவன் அழுகையைக் கேட்டன. அவைகள் உடனே அவனிடம் வந்து அவனுக்கு நாலுபக்கங்களிலும் நின்று கொண்டன. புலி கிட்ட வந்தது. எந்தப் பக்கம் புலி வந்தாலும் நான்கு எருதுகளும் ஒன்ருய்ச் சேர்ந்து கொம்புகளை நீட்டிக்கொண்டு அதைக் குத்திக் கொல்ல ஆரம்பித்தன. அதனுல் புலி ஒன்றும் செய்யமுடியாமல் ஓடி விட்டது. அப்பொழுது முருகனுக்கு உண்டான சந்தோஷம் சொல்ல முடியாது. எருதுகளை அவன் தட்டிக் கொடுத்து முத்தமிட்டான். அவைகள் அவனை ஜாக்கிரதையாக வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்தன.

பதங்கள்:—நிறத்திலும்-உருவத்திலும்-வித்தியாசம்-தினவு-தெளிவான-அதட்டுவது - கஷ்டம் - குரல் - விரைந்து-திடீரென்று-பேரொலி -திடுக்கிட்டு.

காபிபாரம்:—உபகாரம் வீண் போகாது.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.


பாடம் 5.

## குரங்கு.

1. அடுத்த பக்கத்தில் மரத்தின்மேல் உட்கார்ந்திருப்பது என்ன பிராணி. அதனை நன்கு உற்றுப்பார். இவ்விதமான பிராணியை இதற்கு முன் எங்கேயாவது நீ பார்த்திருக்கிருயா? இது தான் குரங்கு. கண்ணைத் திறக்கிறதுபார். வாயை

யும் திறக்கிறது. கண்ணை நன்ருய் விழித்துக் கூச்சலிட்டு உன்னைப் பயமுறுத்துகிறது.

2. இதன் முகத்தைப்பார். ஏறக்குறைய ஒரு மனிதன் முகத்தைப்போல் இருக்கிறது. இதன் அவயவங்களும் மனிதனுடைய அவயவங்களைப் போலவே இருக்கின்றன. ஆனல், மனிதனுக்கு இல்லாதது ஒன்று இதற்கு இருக்கிறது. அது



தான் வால். இதன் உடம்பெல்லாம் மயிர் மூடியிருக்கிறது. மிருகங்களைப்போல் இதற்கு நான்கு கால்கள் இல்லை. மனிதரைப்போலவே குரங்களுக்கு இரண்டு கைகளும் இரண்டு கால்களும் உண்டு. அவற்றின் கைகளிலும் கால்களிலும் ஐந்து விரல்கள் இருக்கின்றன. குரங்குகளுக்குக் கால்விரல்களைக் காட்டிலும் கைவிரல்கள்

நீளமானவை. குரங்கு நம்மைப்போல் பூமியில் நடக்காது. ஏனென்றால் அதன் பாதங்கள் நம்முடைய பாதங்களைப்போல் உறுதியாகவும் பெரியவைகளாகவும் இல்லை. உள்ளங்கைகளைப்போல்



மிருதுவாயிருக்கும். குரங்குகள் விசேஷமாக மரங்களிலேயே தொத்துகின்றன. அவைகள்

ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குப் பயமில்லாமல் வேகமாகத் தாவும். கிளைகளைக் கையினால் பிடித்துக்கொள்வது போல் கால்களினாலும் பலமாகப் பிடித்துக்கொண்டு தொங்கும். ஒரு மரத்திலிருந்து வேறொரு மரத்திற்கும், ஒரு கிளையிலிருந்து வேறொரு கிளைக்கும் சிறிதும் வருத்தமில்லாமல் பாயும்.

3. குரங்கின் வாயில் இரண்டு பக்கங்களிலும் பைகள் உண்டு. தின்பண்டங்கள் எவையேனும் கிடைத்தால் முதலில் அவைகளை வாயிற்போட்டு இந்தப் பைகளை நிரப்பிக்கொள்ளும். பிறகு வாய்க்குள் தள்ளிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகத் தின்னும்.

4. குரங்குகளுக்குச் சாகா மிருகம் என்று பெயர். அவை எப்போதும் மரங்களிலேயேதிரிவதால் அவற்றிற்கு இந்தப்பெயர் வந்தது. சாகா என்பது கிளை. அவை செடிகளிலுள்ள பிஞ்சு, காய், பழம் முதலியவற்றைத் தின்று பிழைக்கின்றன. கிழங்குகளையும் தின்பதுண்டு. அரிசிபோட்டால் குரங்கு அதிசீக்கிரமாக அதனை வாயில் உள்ள பைகளில் நிரப்பிக்கொள்ளும். அப்போது பைகள் உப்பிக்கொண்டிருக்கும்.

5. குரங்கின் சமீபத்தில் போனால் அது கடிக்கும். குரங்குகளைக் குட்டியா யிருக்கும்போதே பிடிப்பது உண்டு. பிறகு அவை பழகினால் நாயைப்போல் சாதுவாக இருக்கும். குரங்கை வளர்ப்பவனுக்குக் குரங்காட்டி என்று பெயர். அது தன்னை வளர்க்கிறவன் போகுமிடமெல்லாம் கூடவே போகும்.

6. குரங்குகளில் அநேக ஜாதியுண்டு. அவைகளில் சிலவற்றிற்கு வால் கிடையாது.

அவை மனிதனைப்போல் இருக்கும். இந்துக்களில் சிலர் குரங்குகளைப் பூஜிக்கிறார்கள்.

பதங்கள்:—உற்றுப்பார்-பயமுறுத்துகிறது.
ஏறக்குறைய —பழகினதன்று.

டிராயிங்கு:—குரங்கின் கை.

களிமண்வேலை:—குரங்கின் தலை.

காபிபாரம்:—குரங்கு பிடிவாத முள்ளது.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனிவாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## பாடம் 6.

# குரங்குகளின் புத்திகூர்மை.

1. ஒரு குரங்காட்டி இரண்டு குரங்குகளையும் ஓர் ஆட்டையும் வைத்திருந்தான். அவை குட்டிகளாக இருந்ததுமுதல் அவன் அவற்றைவளர்த்துவந்து அவற்றைச் சொன்னபடி செய்யப் பழக்கிவைத்து இருந்தான். அவன் ஊர்தோறும் போய்க் குரங்குகளின் வேடிக்கை காட்டி மிக்க பணம் சம்பாதித்தான். அவன் ஒருநாள் ஒரு கிராம அதிகாரிவீட்டில்வேடிக்கைகாட்டிவிட்டுப் போகும்பொழுது வழியிலுள்ள ஒரு சத்திரத்தில் படுத்திருந்தான். அந்தச் சத்திரத்தில் இருந்த ஒருவன் குரங்காட்டியினிடம் பணம் இருப்பதைத் தெரிந்துகொண்டான். மறுநாள் விடியற்காலையில் குரங்காட்டி வேறோர் ஊருக்குப் போவதற்காக ஒரு காட்டின் வழியே நடந்தான். அவ

னிடம் பணத்தைப் பார்த்த மனிதன் தன் சிநே கிதனுடன் பின் தொடர்ந்தான். நடுக்காட்டில் வந்ததும் அவர்கள் குரங்காட்டியைக் கொன்று விட்டு அவனிடம் இருந்த பணம் துணி முத லியவற்றை எடுத்துக்கொண்டு, அவனை மண் ணில் புதைத்துவிட்டார்கள்.

2. அவனை வெட்டும்போது குரங்குகள் கீச் கீச் என்று கத்திக்கொண்டு ஓடிப்போய் விட்டன. பிறகு, திருடர்கள் ஆட்டை ஓட்டிக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் செய்கைகளை எல்லாம் குரங்குகள் கவனித்துக்கொண்டே யிரு ந்தன. பிறகு அவைகள் அந்த ஊருக்குப்போய் அதிகாரியின் கையைப் பிடித்து இழுத்துக் கூச் சலிட்டன. அவை குரங்காட்டியின் குரங்குகள் என்று அவன் தெரிந்துகொண்டான். பிறகு ஒன்று முன்னே ஓடிற்று. மற்றொன்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு காட்டிற்குப் போ யிற்று. முன்னே ஓடின குரங்கு மண்ணைக் கை களால் தோண்டிக் காட்டிற்று. குரங்காட்டி கொல் லப்பட்டிருப்பதை அதிகாரி பார்த்தான். பிறகு குரங்குகள் அவனைச் சத்திரத்திற்கு அழைத்துப் போய் அந்தத் திருடர்களின் கால்களைக் கட்டிக் கொண்டன. அதிகாரி நடந்தவற்றை ஊகித்து அறிந்துகொண்டு அந்த இரண்டு மனிதர்களை யும் விசாரித்துத் தக்க தண்டனை விதித்தான். குரங்குகள் இரண்டும் அதிகாரியின் வீட்டிலேயே பின்பு சுகமாய் வளர்ந்து வந்தன.

பதங்கள் :—குரங்காட்டி-பழக்கி - வழியில்-சத் திரத்தில் - சிநேகிதன் - திருடர்கள் - கூச்சலிட்டன-ஊகித்து-விதித்தான்.

காப்பிபாரம்:—பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.


பாடம் 7.

## வேப்பமரம்.

1. வேப்பமரம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? வேப்பங் கிளைஒன்றை ஒடித்துக்கொண்டு வா. வேப்பமரம் நமது தேசத்தில் உள்ள பெரிய மரங்களில் ஒன்று. நட்ட சில வருஷங்களுக்குள் அது பெரிய மரமாகும். மரத்தின் அடியில் தோண்டினால் வேர் காணப்படும். இந்த வேர்கள் நிலத்தில் இறங்கியிருக்கும். மேலே மரம் படர்வதுபோல் பூமிக்குள் வேர் படரும். வேர்களை வெட்டிவிட்டால் செடி பிழைத்திராது. மரம் வளருவதற்குத் தண்ணீர் வேண்டும். நாம் தண்ணீர் ஊற்றாமலே அநேகம் மரங்கள் வளர்கின்றன. நிலத்தைத் தோண்டினால் ஈரமண் இருக்கும். பூமிக்குள் தண்ணீர் இருக்கிறது மரங்கள் வேர்களின் மூலமாக இந்தத் தண்ணீரை இழுத்துக்கொள்ளுகின்றன.

2. மரத்தின் அடிப்பாகத்தை நன்றாகப்பார். மரம் வளரவளர இந்தப்பாகம் பருத்து உயரும். இதற்கு அடிமரம் என்று பெயர். விதையிலிருந்து முதலில் உண்டாவது இதுவே. சிறிது காலம் இதுஒருகொம்புபோல் இருக்கும். இதன் மேல் பட்டை மூடியிருக்கிறது. வேப்பமரத்தின் பட்டையை உற்றுப்பார். அது எப்படி இருக்கி

றது? நம்முடைய தேகத்தின்மேல் தோல் மூடியிருப்பது போல் பட்டையானது மரத்தை மூடியிருக்கிறது. என்றாலும் பட்டை எவ்வளவு பருமனாக இருக்கிறது பார். அது வெடித்திருக்கிறது.



3. அடிமரத்திலிருந்து கிளைகள் புறப்பட்டு எல்லாப்பக்கங்களிலும் பரவியிருக்கின்றன. இக் கிளைகள் அடிமரத்தைக்காட்டிலும் மென்மையாக இருக்கும். ஒவ்வொரு பெரிய கிளையிலிருந்தும் அநேக சிறுகிளைகள் உண்டாகித் தழைக்கின்றன. இந்தச் சிறு கிளைகளில் இலைகள், பூக்கள், காய்

கள், பழங்கள், முதலியவைகள் இருக்கின்றன. வேப்பிலை மிகவும் சிறியது. ஓரங்களில் வாள் போல் இருக்கும். இலை பச்சையாயிருக்கும். சில நாள் இருந்து பிறகு இலைகள் உதிர்ந்துபோம். வேப்பிலையை நாம் அநேகவிதமாக உபயோகப் படுத்துகிறோம். வேப்பிலையை அம்மை முதலான வைகண்ட வீடுகளிலும், பிரசவமான வீடுகளிலும் கட்டுவார்கள். மந்திரிப்பதற்கும் வேப்பிலைகள் உபயோகமாகின்றன. வேப்பமரம் விசேஷமாக இருக்கிற ஊர்களில் ஜனங்கள் மிகவும் சௌக்கிய மாக இருப்பார்கள். வேப்பங்காற்று மிகவும் ஆரோக்கியமானது. வேப்பிலையை அரைத்து அம்மை போட்டினவர்கள் அம்மைகளின் மேல் போட்டுக் கொள்வதை நீ பார்த்ததில்லையா?

4 உன் தாயார் உனக்கு வேப்பிலை உருண்டை கொடுத்ததில்லையா? வேப்பிலை உருண்டை இன்ன தென்று உனக்குத் தெரியுமா? வேப்பங் கொழுந் தும், உப்பும், மிளகும், பூண்டும், ஓமமும் சேர்த்து அரைத்ததுதான் அந்த உருண்டை. தின் பதற்கு அது கசப்பாயிருக்கும். ஆனாலும் அது உடம்பிற்கு மிகவும் நல்லது. சிலர் வேப்பங்குச் சியால் பல் தேய்த்துக் கொள்ளுகிறார்கள். வேப் பம் பூ வெண்மையாக இருக்கும். அது வாசனை உள்ளது. அதை வெல்லத்தோடு சேர்த்துப் பச் சடி செய்வார்கள். பூவை உலர்த்தி அநேகவித மாக உபயோகிப்பார்கள்.

5. வேப்பங் காயைப் பார். இது பச்சையாயும் வழவழப்பாயும் இருக்கிறது! இது பழுத்தால் மஞ்சள் நிறமாகும். சிலர் இதன் பழத்தைத் தின் பார்கள். வேப்பம்பழம் காக்கைகளுக்கு மிகவும் பிரியமானது. வேப்பங் கொட்டையை உலர்த்தி

எண்ணெய் எடுப்பார்கள். இந்த எண்ணெய் நாற்றம் அடிக்கும். இதனை ஏழை ஜனங்கள் விளக்குக்கு உபயோகிக்கிறார்கள். இது புண்ணைச் சீக்கிரம் ஆற்றும். அல்லாமலும் இது தலைவலி முதலிய தீராத நோய்களுக்கும் குழந்தைகளின் மாந்தத்துக்கும் கைகண்ட மருந்து.

6. வேப்பமரத்தை நாம் இன்னும் அநேக விதங்களில் உபயோகித்துக் கொள்ளுகிறோம். அதன் பெரிய கிளைகளையும் அடிமரத்தையும் வீடுகள் கட்ட உபயோகிக்கிறோம். அடிமரம் மிகவும் உறுதியானது. இதைப் பலகைகளாகவும் அறுப்பதுண்டு. வேப்பம் வேரும் மிகவும் உபயோகமானதே. நூறு வருஷமான வேர்களை அரைத்தால் சந்தனமணம் வீசும்.

பதங்கள்:— ஆர்க்கு — வேர் - பட்டை - அடிமரம் - உருண்டை - கொட்டை— பச்சடி-கொழுந்து-மணம்.

காப்பி பாரம்:—வேம்பன்றோ காக்கைவிரும்பும் கனி.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து, எழுதுக.

## பாடம் 8.

# காற்று தன்னைப்பற்றிச் சொல்லிய கதை.

1. பிள்ளைகளே, நீங்கள் என்னை அறிவீர்களா? நீங்கள் என்னை அறிந்திருந்தால் என்னை உற்றுப்பாருங்கள். என்னைப்பார்க்க உங்களால்

முடியாது. உங்கள் கண்ணுக்கு நான் அகப்படமாட்டேன். ஆனாலும் நான் இருப்பதை உங்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். இதுவே என்னுடைய சக்தி. சில வேளைகளில் தெருக்களில் வெகு வேகமாய் வீட்டின் கதவுகளை அசைக்கிறேன். மரங்களின் கிளைகளை ஒடிக்கிறேன். தெருவில் போகிறவர்களின் கண்களில் தூசியைத் தூவிக் கண்களை மூடிக்கொள்ளும்படி செய்கிறேன். அவர்கள் தலையில் போட்டுக்கொள்ளும் குல்லா முதலியவற்றைக்கீழே தள்ளுகிறேன். இப்படி நான் செய்வதால் என்னை நீங்கள் துஷ்டனென்று எண்ணலாம்.

2. ஆனால் நான் செய்யும் உபகாரம் இன்னதென்று சொல்லுகின்றேன் கேளுங்கள். நான் இல்லாவிட்டால் நீங்கள் பிழைத்திருக்கமாட்டீர்கள். குடிப்பதற்கு நீங்கள் சுத்தமான தண்ணீரை உபயோகிக்கவேண்டும். அவ்வாறே நானும் சுத்தமாக இராவிட்டால் நீங்கள் சௌக்கியமாயிருக்க முடியாது. உங்கள் வீட்டிலும் வீட்டின் அருகிலும் சாக்கடை ஜலத்தையும் அழுகின பதார்த்தங்களையும் தங்கவிட்டால் நான் அசுத்தமாவேன். அப்போது என்னை நீங்கள் சுவாசித்தால் வியாதி அடைவீர்கள். என்னைச் சுத்தமாக வைத்திருந்தால உங்களுக்கு யாதொரு வியாதியும் வராது.

3. நீங்கள் வீடுகள் கட்டும்போது நான் தாராளமாக உள்ளே வரவும் வெளியே போகவும் ஜன்னல்கள் வைக்கவேண்டும். நான்புகாத இடம் கிடையாது. அப்படி ஜன்னல்கள் இராவிட்டால் உங்களுக்குக் கெடுதி உண்டாகும். என்னை எவ

ரேனும் ஓர் இடத்தில் இல்லாமற்செய்தால் அங்கே ஒரு பிராணியும் வசித்திராது; விளக்கு எரியாது. நீங்கள் தண்ணீருக்குள் ஐந்து நிமிஷம் இருக்க முடியுமா? அது உங்களால் முடியாது. உங்களுக்கு வேண்டிய காற்று அங்கே இல்லை. நீங்கள் மேகங்களைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? மேலே ஆகாயத்தில் நிமிர்ந்து பாருங்கள். அவை ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு போகின்றன. நானே அவற்றை அந்தமாதிரி போகச் செய்கிறேன். மேகத்திலிருந்து மழை பெய்வதற்கு நானே காரணம். நான் இல்லாவிட்டால் பயிர்கள் வளரமாட்டா. விளக்கை அணைப்பதும் நானே. என்னையே காற்று என்பார்கள்.

பதங்கள்:— நிமிஷம்-சக்தி-கதவு - துஷ்டன்-அழுகின - வியாதி - ஜன்னல்-கெடுதி-மேகம்-காரணம்.

காப்பிபாரம்:—காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## பாடம் 9.

## நமது சக்கரவர்த்தி.

1. மாதவனும் அவன் தகப்பனார் சாம்பசிவ ஐயரும் வருகிறார்கள்.

2. மாதவன்.—அண்ணா, இன்று எனக்கு பள்ளிக்கூடம் இல்லை. சக்கரவர்த்தி பிறந்த நாளாம்.

3. சாம்பசிவ ஐயர்.—உன் உபாத்தியாயர் உன்னை இன்றைக்குப் பள்ளிக்கூடத்திற்கு வரச் சொல்லவில்லையா?

4. மாதவன்.—ஆம். நான் பள்ளிக்கூடம் போகவேண்டும். ஆனால் பாடம் கிடையாது. காலையில் குளித்துவிட்டு நல்ல உடுப்புகள் உடுத்திக்கொண்டு என்னைப் பள்ளிக்கூடம் வரசொன்



னார். எங்களுக்கெல்லாம் கற்கண்டு, வாழைப் பழம், மிட்டாய் முதலியவைகள் கொடுக்கப்போகிறார்கள்.

5. சாம்ப.—இன்றைக்கு நீ பள்ளிக்கூடம் போய் என்னசெய்யப் போகிறாய்?

6. மாதவன்.—எங்களையெல்லாம் ஓடச்சொல்லுவார்கள். பந்தடிக்கவேண்டும். பள்ளிக்கூடம் முழுவதும் மாவிலையும், குருத்தோலைத் தோரண

மும் கட்டியிருக்கிறார்கள். வாசற்படியண்டை வாழைமரங்கள் கட்டியிருக்கிறார்கள். பெரிய கொடிகள் பள்ளிக்கூடத்திற்கு எதிரில் அசைய விட்டிருக்கின்றன. எனக்கு நேரமாய் விட்டது. நான் போகவேண்டும்.

7. சாம்ப.—இன்னும் எட்டுமணியாகவில்லை. போகலாம் இரு. இந்த வேடிக்கைகளும் அலங்காரங்களும் எதற்காக என்று தெரியுமா?

8. மாதவன்—நமது சக்கரவர்த்தி பிறந்த நாளாம்.

9. சாம்ப.—சக்கரவர்த்தி என்றால் என்ன?

10 மாதவன்.—பல அரசர்களுக்கு அரசன் சக்கரவர்த்தி.

11. சாம்ப,—நமது சக்கரவர்த்தி என்று ஏன் சொல்லுகிறோம்.

12. மாதவன்,—நம் தேசத்தின் பல அரசர்களை ஆளுகின்றமையால் நமது சக்கரவர்த்தி என்று சொல்லுகிறோம்.

13. சாம்ப.—நமது சக்கரவர்த்தியின் பெயரென்ன?

14. மாதவன்·—இன்றைக்கு அவருக்கு ஊர் கோலம்.

15. சாம்ப.—ஊர்கோலம் சரிதான்; அவர் பெயரைச் சொல்லு.

16. மாதவன்.—பெயர் எனக்குத் தெரியாது. உபாத்தியாயர் எனக்குச் சொல்லவில்லை.

17. சாம்ப — உபாத்தியாயர் இன்றைக்குச் சொல்லுவார். ராஜாவின் பெயர் ஜார்ஜு சக்கரவர்த்தி என்பது-

18. மாதவன்.—நமது அரசர் பெயர் ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தியா?

19. சாம்ப.—அவரே இவர். ஐந்தாம் ஜார்ஜு என்றால் என்ன தெரியுமா?

20. மாதவன்.—எனக்குத் தெரியாது. நம்முடைய அரசரின் உருவம் புது ரூபாயில் இருக்கிறது. அதுதான் எனக்குத் தெரியும்.

21. சாம்ப.— இவருக்கே ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி என்று பெயர்; இவரே நமது தேசத்தை ஆள்பவர். ஜார்ஜு என்னும் பெயர் உள்ள நான்கு அரசர்கள் இவருக்குமுன் ஆண்டிருக்கிறார்கள். அதனாலேதான் இவருக்கு ஐந்தாம் ஜார்ஜு என்ற பெயர் வந்தது.

22. மாதவன்.—ஆனால் இவர் இன்று எங்கள் பள்ளிக்கூடத்திற்கு வருவாரா? நீங்கள் இவரைப் பார்த்திருக்கிறீர்களா?

23. சாம்ப.—வரமாட்டார். இவர் நம்முடைய ஊரில் இல்லை.

24. மாதவன்.—அப்படியானால் இவர்எங்கே இருக்கிறார்?

25. சாம்ப.—இவர் இங்கிலாந்து தேசத்தில் இருக்கிறார். அது நமது தேசத்திற்கு வெகு தூரத்தில் இருக்கிறது. நமது தேசத்திற்கு இந்தியா தேசம் என்று பெயர்.

26. மாதவன்.—ஆனால் இவர் இங்கே வருகிறதில்லையா?

27. சாம்ப.—இரண்டு தடவைகள் வந்திருக்கிறார். இவருடைய தகப்பனார் ஆண்டபோது இவர் இளவரசாக இருந்தார். அப்போது

இவர் தகப்பனர் இவரை நமது தேசத்திற்கு ஒருமுறை அனுப்பினர். இவர் தகப்பனர் 1910 ஆம் வருஷம் இறந்துவிட்டார். அதன் பிறகு இவர் பட்டத்திற்குவந்தார். அப்பால் இவர் ஒருதடவை நமது தேசத்திற்கு வந்தார். நமது தேசத்தின் முக்கியபட்டணத்திற்கு டில்லி என்று பெயர். அது மிகவும் பெரிய பட்டணம். அங்கே 1911-ஆடு டிசம்பர்மீ 12-ஆம் உ இவர் பட்டங் கட்டிக்கொண்டு சிம்மாசனம் ஏறி அதை எல் லோருக்கும் அறிவித்தார். நமது தேசத்தில் அங்கங்கே இருக்கும் சிற்றரசர்களும் துரைத் தன உத்தியோகத்திலிருக்கும் பல பெரியவர்க ளும் வேறு பல கனவான்களும் டில்லிநகரத்திற் குச் சென்று பலவிதமாய்க் கொண்டாடினர்கள். இதற்கே டில்லி தர்பார் என்று பெயர்.

28. மாதவன்.—இவர் எப்போது பிறந்தார்?

29. சாம்ப.—இன்றைக்கு ஜூன்மீ மூன்றுந் தேதி. இவர் 1865-ஆடு ஜூன்மீ 3-ஆம் உ பிறந்தார். இப்போது இவருக்கு வயதென்ன?

30. மாதவன்.—இப்போது 58 வயது ஆகி றது. ராஜா பிறந்தார் என்ருல் நமக்கு என்ன?

31. சாம்ப.—நம்மை யெல்லாம் காப்பாற்று கிறவர் இவரே. உனக்கும் எனக்கும் இன்னும் நமது தேசத்திலுள்ள எல்லோருக்கும் இவர் பிதாவைப் போன்றவர். நமது தேசத்தில் உள்ள வர்களிடம் இவருக்கு அதிக அன்பு உண்டு. இந் தப் பிரியத்தை இவர் அநேக விதங்களில் நமக் குக்காட்டி யிருக்கிருர். நாமெல்லோரும் க்ஷேம மாயிருக்கவேண்டுமென்ற எண்ணம் எப்போதும் இவருக்கு உண்டு. நமக்கு ஏதாவது ஆபத்து

வந்தால் இவர் மனம் அதிக வருத்தம் அடையும். நமக்கு இவர் செய்யும் உபகாரத்திற்காக இவரிடத்தில் நாம் நன்றி பாராட்டவேண்டும்.

32. மாதவன்.—நமது அரயிசின் பெயரென்ன?

33. சாம்ப.—மேரி ராணி. நமது அரசரைச் சக்கரவர்த்தி என்றுசொல்லுகிறதினுல் அரசியைச் சக்கரவர்த்தினி என்று சொல்லவேண்டும்.



34. மாதவன்.—இவருக்குக் குழந்தைகள் உண்டா?

35. சாம்ப.—இவருக்கு ஐந்து குமாரர்களும் ஒரு பெண்ணும் இருக்கிருர்கள். இவர்களில் மூத்த குமாரரே நமக்கு இளவரசர். அவருக்கு வேல்ஸு இளவரசர் என்று பெயர். அவர்

1894ஞு ஜூன்மீ 23ஆம்வ பிறந்தார். முன் பக்கத்தில் இவருடைய படம் இருக்கிறது பார்.

36. மாதவன்.—எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பெரிய படம் வைத்திருக்கிறார்கள். அதற்கு இன்று சாயங்காலம் ஊர் கோலம் நடக்கும். நம்முடைய வீட்டிலும் அந்தமாதிரி ஒரு படம் இருக்கிறது. நமது அரசன் இங்குவரமாட்டார். அதனாலே தான் அவர் படத்தை அலங்காரஞ் செய்து உத்ஸவம் நடத்துகிறார்கள். நமது அரசர் தீர்க்காயுளோடு இருக்கவேண்டுமென்று நாம் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். எனக்கு உபாத்தியாயர் ஒரு பாடல் சொல்லிக்கொடுத் திருக்கிறார். அதை இன்றைக்கு நான் பாடுவேன். பள்ளிக்கூடம் போக நேரமாயிற்று. நான் போக வேண்டும்.

பதங்கள்:—பள்ளிக்கூடம் - சக்கரவர்த்தி - கற்கண்டு-தோரணம்- அலங்காரம் - ஊர் கோலம்-இளவரசர்.

காப்பிபாரம்:—மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி.

வியாசம்:—மேற்பதங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## பாடம் 10.

## காய்கறிக் கடை.

(முதற்பாகம்)

[ரமணனும் அவன் பாட்டனார் அப்பாசாமி ஐயரும் பிரவேசிக்கிறார்கள்.]

1. அப்பாசாமி ஐயர் — அடே! ரமணா? இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை அல்லவா? உனக்குப் பள்ளிக்கூடம் இல்லையே! கடைக்குப் போய்வரலாம் வருகிறாயா?



2. ரமணன்-தாதா! இதோ வந்துவிட்டேன்; மேலே துணி போட்டுக்கொண்டு வருகிறேன்.

3. அப்பா.—ரமணு! மெதுவாக நடந்துபோ. நான் கிழவனல்லவா!

4. ரமணன்.—தாதா! இந்தத் தெருவின் பெயர் என்ன?

5. அப்பா.—இந்தத் தெருவின் பெயர். ராஜ வீதி. எவ்வளவு விசாலமா யிருக்கிறது. பார்! இதன் இரண்டு பக்கங்களிலும் தென்னை மரங் கள் வைக்கப்பட் டிருக்கின்றன. பெரிய மாடி வீடுகள் இருப்பதை நீ பார்த்தாயா? எவ்வளவு நேர்த்தியாய் இருக்கின்றன! இந்த வீடுகளில் திரைத்தன உத்தியோகஸ்தர்களும் வக்கீல் களும் வர்த்தகர்கள் முதலிய கனவான்களும் வசிக்கிருர்கள்.

6. ரமணன்.—தாதா! அங்கே என்ன கும்பல்?

7. அப்பா.—அதுதான் காய்கறிக்கடை. நம் மைப்போல அந்தக் கும்பலிலுள்ளவர்களும் காய்கறி வாங்க வந்திருக்கிருர்கள்.

8. ரமணன்.—இதுதானு கடை? இங்கே வாழை இலையும், வாழைக்காயும் விற்கிருர்கள். தாதா! எனக்கு வாழைப்பழம் வாங்கிக்கொடுக்கக் கூடாதா? அதென்ன? எதற்காக அதை இங்கே விற்கிருர்கள்?

9. அப்பா.—அதுதான் வாழைப்பூ. வாழைப் பூவைச் சமைத்து உபயோகப் படுத்துகிருேம். இதுதான் பாகற்காய். அந்தக் கூடையில் இருப் பதும் பாகற்காய்தான். இது மிதி பாகற்காய். கூடையிலிருப்பது கொம்புப்பாகல். மிதிபாகல் பூமியில் படர்ந்து கொடிகளின் காய்க்கும். கொம் புப் பாகல் பந்தல்களில் படர்ந்து கொடிகளில் காய்க்கும். மிதிபாகல் குண்டு குண்டாய் இருக்

RGR/1190